கல்குடா கல்வி வலய வளநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை கு.பொ.த (இ/த) – 2018 பங்குனி

தரம்: 12 (2019)	தவணை: 02	தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் I&II	நேரம்: 3மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

பகுதி I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) தகவல் பற்றிய கூற்றுக்களில் தவறானது எது?
   (1). ஒரு கருத்தினை முழுமையாக வெளிப்படுத்தக்கூடியது
   (2). காலத்துக்குப் பொருத்தமானதாக அமைக்கப்பட்டது
   (3). தீர்மானங்களை மேற்கொள்ள பயன்படுத்தக்கூடியது
   (4). காலம் செல்லச்செல்ல அதன் பெறுமதி அதிகரிக்கின்றது
   (5). முன்னர் பெற்ற அறிவினைப் புதுப்பித்துக்கொள்ள உதவக்கூடும்

(2) உயர் மின் அழுத்தத்தினால் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்க கணனியுடன் பயன்படுத்தப்படுவது எது?
   (1). இடைமறிக்கப்படா வலுவழங்கி (U.P.S) (2). தீச்சுவர் (Firewall) (3). கருகி (Fuse)
   (4). மின்வழங்கும் அலகு (Power Supply Unit) (5). நச்சுநிரல் நீக்கி (Anti Virus)

(3) பயனர் பயன்படுத்தும் பிரயோக மென்பொருளை இயங்கும் கணனியொன்று எந்த நிறுவகத்தில் தற்காலிகமாகக் களஞ்சியப்படுத்திச் செயற்படுத்தும்?
   (1). எழுமாறு அணுகல் நினைவகம் (RAM) (2). வன்தட்டு (Hard Disk)
   (3). பதியி நினைவகம் (Register Memory) (4). வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM)
   (5). இறுவட்டு (CD)

(4) வங்கிகளில் காசோலைகளைப் பரிசோதிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கருவி எது?
   (1). OMR (2). MICR (3). OCR (4). DMR (5). Barcode Reader

(5) கணனி திரையில் தோன்றிய நிறமொன்றின் RGB பெறுமானம் (204, 18, 128) ஆகக் காணப்பட்டது. இதில் பச்சை நிறத்தின் துவிதப்பெறுமானம் யாது?
   (1). 1100100 (2). 11100000 (3). 11000 (4). 11001100 (5). 10010

(6) BCD குறிமுறையினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் மிகப்பெரிய தசம எண்ணின் துவிதப் பெறுமானம் யாது?
   (1). 1000 (2). 10001 (3). 011 (4). 1001 (5). 10000001

(7) $11_8 + 74_8$ என்ற எண்கணித இயக்கத்தின் விளைவுப் பெறுமதி யாது?
   (1). 105 (2). 69 (3). 1000101 (4). 45 (5). 85

(8) செயன்முறை நிலை வரைபடத்தில் (Process state Diagram) காத்திருத்தல் நிலையுடன் தொடர்புடைய நிலைகள் எவை?
   A-உருவிக்கப்படல் B-இயக்கநிலை C-முடிவுறுநிலை
   D-மாற்றப்பட்டதும் தடுக்கப்பட்டதுமான நிலை
   (1). A,B (2). B,C (3). B,D (4). A,B,D (5). A,B,D,E

(9) பின்வருவனவற்றில் எது திறந்த முறைமைகளுக்குப் பொருத்தமான உதாரணங்கள் ஆகும்?
   (1). மனித சுற்றோட்டத் தொகுதி, கைப்பேசி (2). ஐகப்பேசி, நரம்புத் தொகுதி
   (3). பாடசாலை, சூரியன் (4). ATM காசளிப்பு இயந்திரம், Visa Card
   (5). சுக்தி, மனித சுற்றோட்டத்தொகுதி

www.ikedu.lk

(10) கீழே காட்டப்பட்ட K-map இல் இனால் காட்டப்பட்டுள்ள கலங்களின் சிறுபகுதிக்கோவைகளில் சரியானது எது?

x \	x	x
y	0	0
y	1	1

(1). $(\bar{x}\bar{y})$, $(x\bar{y})$ (2). (xy), $(\bar{x}y)$ (3). $(\bar{x}\bar{y})$, $(x\bar{y})$, (xy)
(4). $(\bar{x}+\bar{y})$, $(x+\bar{y})$ (5) $(\bar{x}+y)$, $(x+y)$

(11) காட்டப்பட்ட K-map இல் spos கோவை எது?

(1). $(x+\bar{y})$ $(\bar{x}+\bar{y})$ (2). $(x+y)$, $(\bar{x}+y)$ (3). $(\bar{x}+\bar{y})$, $(x+\bar{y})$ (4). $(xy)+(\bar{x}y)$ (5) $(\bar{x}+\bar{y})$ $(\bar{x}+\bar{y})$

(12) பின்வரும் வாக்கியங்களுக்கு அதிகம் பொருத்தமான தகவல் முறைமை எது?

P1-அறிக்கைகளை பதிப்பித்து தயாரித்தல் **P2**-வேலைகளை கால அட்டவணைப்படுத்திக் குறித்தல்
P3-வேதனப்பட்டியல் தயாரித்தல் **P4**-நிறுவனத்துக்குரிய தகவல்களைப் பராமரித்தல்

(1). அலுவலக தானியங்கி முறைமை (OAS) (2). முகாமைத்துவ தகவல் முறைமை (MIS)
(3). தீர்மான உதவு முறைமை (DSS) (4). நிபுணத்துவ முறைமை (ES)
(5) நிறைவேற்று ஒத்துழைப்பு முறைமை (ESS)

(13) இரு கணனிகளுக்கிடையே தகவல் பரிமாற்றம் இடம்பெறும் போது காணப்படவேண்டிய அடிப்படைக் கூறுகள் எவை?

A-அனுப்புனர் B-பெறுநர் C-செய்தி D-ஊடகம் E-நெறிமுறைகள்
(1) A,B (2). A,B,C (3). A,B,C,D (4). A,B,C,D,E (5). A,B,D

(14) தன்னியக்க முறையில் வலைக் கடப்பிடங்குள்கு செய்திகளை வழங்குவது எது?

(1). Podcast (2). Wikipedia (3). Blog (4). Softlogic (5). Socialnetwork

(15) பின்வரும் கூற்றுக்களில் அந்நியச்சாவிப் புலத்திற்குப் பொருத்தமானவைகள் எவை? உறவுமுறைத் தரவுத்தளமொன்றில் அந்நியச் சாவியானது

A- ஒரு முதன்மைச் சாவிப்புலமாகவும் பயன்படுத்தப்படலாம்
B- ஒரு தெரிவுநிலைச் சாவியாகவும் முன்னர் கருதப்பட்டு இருக்கலாம்
C- ஒரு மாற்றுநிலைச் சாவியாக இப்பொழுதும் காணப்படலாம்
D- ஒருபொழுதும் ஒரு தரவுப் பெறுமானத்தினை மாத்திரம் கொண்டதாக அமையாது

(1). A மாத்திரம் (2). B மாத்திரம் (3). A,B மாத்திரம்
(4). A,B,C மாத்திரம் (5). மேற்கூறிய அனைத்தும்

(16) நிரல் P, நிரல் Q என்பவற்றினைக் கருதுக.


நிரல் - P	நிரல் -Q
A-பயனர்	X-ஒன்றிணைப்புச் சோதனை
B-பாண்டித்தியம் பெற்றவர்	Y-கறுப்புப் பெட்டிச் சோதனை
C-முறைமை அபிவிருத்தியாளர்	Z-வெண்பெட்டிச் சோதனை

நிரல் -P சம்பந்தப்பட்ட ஆளணியினரையும், நிரல் -Q சோதனை வகைகளையும் கொண்டுள்ளது. சோதனைகளுக்குப் பொருத்தமான சோடிகளைக் குறிப்பது எது?


(1). (a,x), (b,y), (c,z) (2). (a,y), (b,z), (c,x) (3). (a,z), (b,x), (c,y) (4). (a,y), (b,x), (c,z)
(5). (a,z), (b,y), (c,x)

(17) எனும் பூலியன் கோவையின் வெளியீட்டைத் தரத்தக்க தர்க்கப் படலைத் தொகுதி எது?

(1)




(2)




www.ktcu.lk

(3)



(4)



(5) மேற்கூறப்பட்ட எதுவுமில்லை

(18) முறைமை அபிவிருத்தி வாழ்க்கை வட்டத்தில் மனிதவளம், ஆளணிவளம் உண்டா எனக் கண்டறியும் செயற்பாடு எப் படிநிலையில் காணப்படுகின்றது?
(1). முறைமை ஆய்வு (2). முறைமை வடிவமைப்பு (3). சாத்தியவளக் கற்கை
(4). முறைமைச் சோதனை (5). முறைமை அபிவிருத்தி

(19) கணனியில் எழுத்துருக்களைப் பிரதிநிதித்துவம் செய்யபயன்படுத்தாத குறியீட்டு முறை எது?
(1). BCD (2). EBCDIC (3). ASC II (4). Unicode (5). Multicode

(20) கணனியின் இயக்க முறைமைகள் மூலமாக சோவைகள், அடைவுகள் என்பன முகாமைத்துவப்படுத்தப்படும் முறையாக அமைவது எது?
(1). FAT (2). ASCII (3). Processing (4). File Management
(5). Timesharing

(21) வங்கிகளில் நடைமுறைக் கணக்கிற்கான, மாதாந்த வங்கிக்கூற்று வழங்கப்படுவது வழக்கமாகும். இங்கு வங்கிக்கூற்றுத் தயாரிக்கும் செயற்பாடானது பின்வரும் எவ்வகையைச் சேர்ந்தது?
(1). Real time Processing (2). Online Processing (3). Manual Processing
(4). Parallel Processing (5). Batch Processing

(22) மாயா நினைவகம் (Virtual memory) பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?
A-வன்வட்டமானது முற்றுமுழுதாக நினைவகமாக மாற்றப்படுகின்றது.
B-அது பௌதீக நினைவகத்தினைவிட அதிகமாகும்
C-அது பௌதீக நினைவகத்திலிருந்து தருக்க நினைவகத்தினை வேறுபடுத்துகின்றது.
(1) A மாத்திரம் (2). B மாத்திரம் (3). C மாத்திரம் (4). A,B மாத்திரம் (5). B, C மாத்திரம்

(23) பணிச் செயன்முறைமையில் "……." என்பது முறைமையினது செயற்றிறனை அதிகரிப்பதற்கு வன்வட்டில் சிதறுண்ட கோப்புக்களை (fragmented files) ஒன்றுசேர்க்கின்ற (Consolidating) வழிமுறையாகும்.
(1). துண்டாக்குதல் (Fragmentation) (2). இடமாற்றுதல் (Swapping)
(3). ஒருங்கிணைத்தல் (Defragmentation) (4). வடிவமாக்கல் (Formatting) (5). முறைவழி

(24) கீழ்வரும் விடயங்களுக்குப் பொருத்தமான அர்த்தமுள்ள சொல்
-தரவு கணனியில் பிரதிநிதித்துவம் செய்யும் முறை
-தரவு கணனியின் செயற்பாட்டில் அணுகப்படும் விதம்
-தரவின் அர்த்தத்தினை விபரிக்கும் முறை
(1) தரவு மாதிரி (2). தரவுத்தள மாதிரி (3). தரவுப் பாய்ச்சல் (4). சுட்டி (5). சொல் அளவு

(25) அளித்தவர் யார் (மூலம்), ஆவணம் பெறுபவர் யார் என்னும் புலங்களைக் கொண்ட அட்டவணை பெருமளவில் பயன்படுத்தப்படும் முறைமைத் தேவையை நிர்ணயிக்க உதவும் கருவி எது?
(1). பயனர் விடய வரைபடம் (2). செயற்பாட்டு வரைபடம் (3). ஆவணப்பாய்ச்சல் வரைபடம்
(4). தரவுப் பாய்ச்சல் வரைபடம் (5). சூழலலைவு வரைபடம்

www.ikeu.lk

பகுதி II

பகுதி II-A இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும், பகுதி II-B இல் இருந்து எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் 10 வினாக்களுக்கு விடையளிக்க.

பகுதி II - A அமைப்புக்கட்டுரை வினாக்கள்

வினா 01)

a) (-44) (-24) எனும் எண்களைக் கூட்டுவதற்கு 8 பிற்றுக்கள் கொண்ட இரண்டின் நிரப்பி (Twos complement) முறையினைப் பயன்படுத்துக. உமது கணிப்புக்களைக் காட்டுக.

b) முதலாவது கணினி தலைமுறையில் பயன்படுத்தப்பட்ட வெற்றிடக் குழாயினால் பெறப்பட்ட பிரதான இலத்திரனியல் தொழினுட்ப பயன் ஒன்று எழுதுக.

c) முதலாவது கணினி நிகழ்ச்சி நிரல் மொழியாகிய ADA இல் பயன்படுத்தப்பட்டுள்ள மூலக்குறிகள் 02 எழுதுக.

d) சேமிக்கப்பட்ட கட்டளைத் தொகுதி பயன்பாட்டை அறிமுகப்படுத்தியவர்.

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 02)

சேர்மானத் தர்க்கவியல் வாயில்கள் மூன்றினைக் குறிப்பிடுக. அவற்றின் வரிப்படங்களை வரைக.

(AND, OR, XOR, NOR என்பவற்றைக்கொண்டு சேர்மானத் தர்க்கவியல் வாய்ல்களை வரைக.)

a) சேர்மானத் தர்க்கவியல் வாயில்களின் பெயர்கள்.

…… …… ……
…… …… ……
…… …… ……

b) மேலே நீர் குறிப்பிட்ட சேர்மான தர்க்க வாயில்களுக்கான வரிப்படங்கள்.

…… …… ……
…… …… ……
…… …… ……

c) பின்வரும் K map இல் தரப்பட்ட கோலங்களைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

	PQ	P'Q	P'Q'	PQ'
AB	0	1	1	0
A'B	0	0	0	0
A'B'	1	0	0	1
AB'	1	1	1	1

(i) இடப்பட்டுள்ள அடையாளங்களுக்கான நியமபெருக்கலின் கூட்டல் கோவை ஒன்று எழுதுக.

(ii) அதிக எண்ணிக்கயான அடையாளங்களைக் கொண்டதாக, கீழே தரப்பட்ட K map இல் சேர்மானங்களை வரைபுபடுத்துக.

	PQ	P'Q	P'Q'	PQ'
AB	0	1	1	0
A'B	0	0	0	0
A'B'	1	0	0	1
AB'	1	1	1	1

(iii) வினா (ii) இல் நீர் வரைந்த சேர்மானங்களுக்கு ஏற்ப உமது பூலியன் கோவையை எழுதுக.

(iv) (iii) இல் பெற்ற பூலியன் கோவைக்கான தர்க்கப் படலையை வரைக.

(மொத்தம் 10 புள்ளிகள்)

www.ikdu.lk

வினா 03)

a) (i) முறைவழியாக்கியின் செயற்றிறனை உச்சப்படுத்துவதற்காக, பயனாகும் தற்காலிக நினைவகக் களஞ்சியங்கள் 2 எழுதுக.

(ii) காந்த தொழினுட்பத்தைக் கொண்டுள்ள இரண்டு துணைநினைவகங்கள் குறிப்பிடுக.

b) பின்வரும் மென்பொருள்களை முறைமை மென்பாருள் (System software) அல்லது பிரயோக மென்பொருள் (Application software) என வகைப்படுத்துக.

மென்பொருள்	வகை
Unix	……
சொல்முறை வழிப்படுத்தல்	……
இணைய உலாவி	……

c) பின்வரும் அட்டவணையினைக் கருதுக.

இல.	உள்ளடக்கம்	பெயர்	விளக்கம்
1	முறைவழி	A	நினைவகத்தில் முற்றுமுழுதாக இல்லாத முறைவழிகளின் நிறைவேற்றுகைகளையும் அனுமதிக்கின்ற ஓர் உத்தியாகும்.
2	கோப்புமுறைமை (file system)	B	கோப்புக்களைத் தேடுவதற்காக செயற்றிறனைக் குறைக்கின்றது.
3	மாயா நினைவகம் (Virtual memory)	C	தரவுகள் எவ்வாறு களஞ்சிப்படுத்தப்பட்டு மீளப்பெறப்படுகின்றது, என்பதைக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.
4	துண்டாக்கம் (Fragment)	D	நிறைவேற்றுதலில் உள்ள செய்நிரலாகும்.

பின்வரும் இடைவெளிகளில் பொருத்தமான பெயர்களை எழுதுக.

1. …….. 2. ……
2. …….. 4. …….

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04)

a) முறைமைக்கு ஒரு வரைவிலக்கணம் தருக.
b) மேலே a) இல் தெரிவித்த வரைவிலக்கணத்தைப் பயன்படுத்திச் செல்லிடத் தொலைபேசி ஒரு முறைமை எனக் காட்டுக.
c) செல்லிடத் தொலைபேசி ஒரு மூடிய முறையா, திறந்த முறையா எனக் குறிப்பிடுக. உமது விடையை நியாயப்படுத்துக.
d) சேல்லிடத் தொலைபேசியின் பின்வரும் தேவைகள் தொழில் சார்ந்தனவா (functional), தொழில் சாராதனவா (nonfunctional) எனக் குறிப்பிடுக.
   (i) பயனர் ஒருவர் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தி ஒரு அழைப்பை செய்யத்தக்கதாக இருக்கும்.
   (ii) அது கதிர்ப்புக்களைக் காவுவதன் மூலம் பயனருக்கு தீங்கு பயக்காததாக இருக்கும்.

(மொத்தம் 10 புள்ளிகள்)

www.ikeuk

பகுதி II - B

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.

வினா (01)

ஓர் இலத்திரனியல் மூன்று ஆளிகள் R,S மற்றும் T ஆகியவை சரியாக ஒழுங்கமைக்கப்படும் போது மாத்திரமே இயங்கும். R மற்றும் S ஆகிய இரண்டும் ON நிலையிலும் அல்லது R OFF நிலை மற்றும் S மற்றும் T ஆகிய இரண்டும் ON நிலையிலும் இருக்கும் போது, வருவிளைவுச் சமிக்ஞை (x=1) நடைபெறும்.

(a) மெய்யட்டவணையினை அமைக்க.
(b) பூலியன் கோவையினை நியம –SOP (Sum-of-product) வடிவில் எழுதிச் சுருக்குக. (அனைத்து செய்கைகள் மற்றும் அட்சரகணித விதிகளையும் காட்டுக.
(c) மேலே (b) இல் பெறப்பட்ட சுருக்கப்பட்ட பூலியன் கோவைக்கான தருக்கச்சுற்று வரைபடத்தினை வரைக.
(d) இவ் இலத்திரனியல் சாதனமானது, ஏதாவது இரு ஆளிகள் சரியாக தொழிற்படும்போது இயங்கும் என்று கூறுகின்றார். நீர் இக் கூற்றை ஏற்கின்றீரா? உமது விடையினை நியாயப்படுத்துக.

(மொத்தம் 15 புள்ளிகள்)

வினா (02)

(a) தேயிலை உற்பத்தி தொழிற்சாலை ஒன்றில் இருந்து அதிகளவில் மொத்தமாகப் பெற்று, அவற்றை 50g, 100g, 250g, 500g, 1Kg போன்ற நிறைகளில் கைமுறையாக, சிறிய பொதிகளாக்கி மீளவும் அவற்றை அதே தொழிற்சாலைக்கு கையளிப்பது 'Kani கைத்தொழிலாளர்' நிலையத்தின் பிரதான செயற்பாடு ஆகும்.
   (i) 'Kani கைத்தொழிலாளர்' நிலையத்தின் பிரதான உள்ளீடுகள் இரண்டு தருக.
   (ii) இந்நிலைய முறைமையின் முறைசார்ந்த தேவை ஒன்று எழுதுக.
   (iii) இந்நிலைய முறைமையின் முறைசாரா தேவைகள் இரண்டு எழுதுக.

(b) மேற்கூறிய முயலை கைத்தொழிலாளர் நிலையத்தின் செயற்பாடுகளை கணனிமய இயந்திரங்கள் கொண்ட முறையாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது எனில்,
   (i) இந்நிலையத்திற்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் இரண்டு எழுதுக.
   (ii) தற்போது சேவையிலுள்ள கைத்தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் இரண்டு எழுதுக.
   (iii) நிலையத்தினைச் சூழவுள்ள, சுற்றாடலுக்கு எற்படக்கூடிய பிரதிகூலங்கள் இரண்டு எழுதுக.

(மொத்தம் 15 புள்ளிகள்)

வினா (03)

(a) (i) கணனி ஊடான, தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் என்றால் என்ன?

   (ii) தகவல் தொடர்பாடலில் இடம்பெறும் ஐந்து (5) பிரதான பகுதிகளில் ஏதாவது மூன்றினைத் தருக.

   (iii) தகவல் தொடர்பாடலில் பயன்படுத்தப்படும் இரு வேறுபட்ட தொழினுட்ப ஊடகங்கள் இரண்டு எழுதுக.
   (iv) இரு கணினிகளை இணைக்க பயன்படுத்தப்படும் வலையமைப்புச் சாதனங்கள் இரண்டு எழுதுக.

(b) (i) வலைப்பின்னல் இடத்தியல்கள் STAR, TREE என்பவற்றுக்குப் பொருத்தமான படங்களை வரைக.
   (ii) STAR, TREE கணனி வலைப்பின்னல் வரைபடங்களை ஐந்து (5) கணனிகளைப் பயன்படுத்தி வரைக.
   (iii) Gsm எனும் சுருக்கத்தின் விரிவாக்கம் யாது?

(மொத்தம் 15 புள்ளிகள்)

www.kedu.lk


வினா (04)

(a) (i) உறவுமுறைத் தரவுத்தளம் ஒன்றில் அந்நியச் சாவிப்புலம் ஆற்றும் பிரதான பணி என்ன?

(ii) இத்தகைய அந்நியச்சாவிப்புலம் ஒன்றானது ஏன் வேறு ஒரு அட்டவணையின் முதன்மைச் சாவிப்புலமாக இருத்தல் வேண்டும் காரணம் தருக.

(iii) வேட்பாளர் சாவிகளுள் ஒன்றை அந்நியச் சாவியாகப் பயன்படுத்த முடியுமா? உமது விளக்கத்தை எழுதுக.

(b)



ரிவுரையின் அட்டவணை, பாடநெறி அட்டவணை என்பவற்றுக்கிடையிலான உறவுமுறைத் தொடர்பு மேலே காட்டப்பட்டுள்ளது.

ஒரு விரிவுரையாளர் பல பாடநெறிகளை கற்பிக்கும் அதேவேளை, ஒரு பாடநெறியை பல விரிவுரையாளர்களும் கற்பித்தல் முடியுமாகும்.

(i) இவ் அட்டவணைகளுக்கிடையில் உறவுமுறை வகை யாது?

(ii) ஒவ்வொரு அட்டவணைகளுக்கான முதன்மைச் சாவிப்புலங்களை அட்டவணைகளின் பெயர்களுடன் எழுதுக.

(iii) ஒவ்வொரு அட்டவணைகளில் அந்நியச் சாவிப் புலங்களின் பெயர்களை அட்டவணையின் பெயருடன் எழுதுக. அந்நியச் சாவி இல்லாதவற்றையும் குறிக்க.

(மொத்தம் 15 புள்ளிகள்)

வினா (05)

பின்வரும் சந்தர்ப்பத்திற்கு 'சூழ்நிலை வரிப்படத்தை' (Context level diagram) வரைக.

ஒரு நோயாளி, மீண்டும் மருந்து எடுப்பதற்கு Golden City வைத்தியசாலைக்கு வருகைதரும் போது, வரவேற்பாளர் மருந்துச் சிட்டை (Prescription file) பரிசோதித்து ஒரு விழிப்புணர்வு (Prescription) எழுதுகிறார். பின்பு நோயாளிக்கு மருந்து கொடுப்பதற்கு, முன்னர் மருத்துவரால் இவ் மருந்துச் சிட்டை அங்கீகரிக்கப்படல் வேண்டும். வேதியியலாளர் (Chemist) பின்னர் நோயாளிக்கு மருந்து கொடுக்கின்றார். நோயாளிக்கு இலவச மருந்துகளுக்கு உரிமை இருந்தால், வேதியியலாளர் இதைச் சரிபார்த்து ஒரு படிவத்தில் சரியான விபரங்களை நிரப்புகின்றார். பின்னர் இவ் இலவச பரிந்துரைப்பு கோப்பில் தாக்கல் செய்யப்படுகின்றது (பதியப்படுகின்றது). நோயாளிக்கு இலவச பரிந்துரைப்ப இல்லை எனில், வேதியியலாளர் நோயாளியிடமிருந்து சரியான அளவு பணத்தைப் பெற்றுக்கொண்டு நோயாளிக்கு மருந்தைக் கொடுக்கின்றார்.

(மொத்தம் 15 புள்ளிகள்)

வினா (06)

(a) OMR, OCR எனும் வருடிகளுக்கிடையே, காணப்படும் அடையாள வாசிப்பு சம்பந்தமான வேறுபாட்டை எழுதுக.

(b) தரவு செல்லுபடியாக்கும் முறைகள் இரண்டு எழுதுக.

(c) 'Video Conferencing ஒளிப்பட உரையாடல்' என்பது மற்றைய முறைகளிலும் பார்க்க சிறந்தது எனக் கொள்ளப்படுவதற்கான காரணங்கள் இரண்டு எழுதுக.

(d) பின்வரும் துறைகளில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் இரண்டு வீதம் எழுதுக.

(i) சுற்றாடல் (Environment)

(ii) சட்டம் (Legal)

(மொத்தம் 15 புள்ளிகள்)

www.ikeu.lk